# பிராந்திய ஆவணப்படுத்தல் - யாழ்ப்பாணம்

## நூலக நிறுவனம் அறிமுகம்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்துவதில் ஈடுபட்டு வரும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்டச் சுருக்கம்

யாழ்ப்பாண பிராந்திய ஆவணகத்தில் யாழ் மாவட்டத்தின் வரலாறு, அங்கு வாழும் மக்களின் பாரம்பரியங்கள், பழக்கவழக்கங்கள், கலை கலாசாரக் கூறுகள், சமூகக் கட்டமைப்புக்கள், விவசாயம் மற்றும் இதர வாழ்வாதார முறைகள், பன்மைத்துவம், சமூக நிறுவனங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத் தளங்கள், பெண்கள் அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், அந்த மாவட்டத்திலே இடம்பெற்ற பொருளாதார மாற்றங்கள், அபிவிருத்தி முயற்சிகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முறைகள் போன்றன பற்றியும் பண்டைய வரலாற்றினையும், அந்தப் பிரதேசத்தின் அரசியற் தனித்தன்மைகளையும், மன்னார் இலங்கையின் வேறு இராசதானிகளுடன் கொண்டிருந்த உறவுகளையும் ஆவணப்படுத்துவதே இச்செயற்றிட்டமாகும்.

## அறிமுகமும் பின்புலமும்

யாழ்ப்பாணம் என்பது இலங்கைத் தீவின் வடமுனையிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகராகும். இது யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்குப் பகுதியில் யாழ்ப்பாண நீரேரியைப் பார்த்தபடி அமைந்துள்ளது. இலங்கையின் தலைநகரான கொழும்பிலிருந்து 396 கிமீ தூரத்தில் அமைந்துள்ள இந்நகரம், 88,138 மக்கட்தொகையினைக் கொண்டு 12வது பெரிய நகரமாக விளங்குகிறது. 1987 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடமாகாணத்தின் தலைநகரமாக விளங்கிய யாழ்ப்பாணம், அந்த ஆண்டில், தற்காலிகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து உருவான வட-கிழக்கு மாகாணசபைக்குத் திருகோணமலையைத் தலைநகரமாக்கியபின், மாகாணத் தலைநகரம் என்ற நிலையை இழந்தது. வடக்குக் கிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்ட பின்னர் வடமாகாணத் தலைநகராக யாழ்ப்பாணம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## செயற்றிட்டத்துக்கான நியாயப்பாடு

நூலகம் நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றினையும், வாழ்க்கை முறைகளினையும், அவர்களின் வாழ்வுடன் பிணைந்த சமூக, கலாசார, பொருளாதார, அரசியல் விடயங்களையும் ஆவணப்படுத்தி வருகிறது. தமிழ் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டமாக விளங்கும் யாழ்ப்பாண மாவட்டத்தினை ஆவணப்படுத்துவது இந்த வகையில் முக்கியத்துவம் மிக்கது.

இலங்கையில் வரலாற்று சிறப்பு வாய்ந்த இடங்களில் யாழ்ப்பாணமும் ஒன்றாகும். மன்னராட்சி காலத்தில் இருந்தே பல சிறப்புக்களையும் வரலாற்றினையும் தன்னகத்தே கொண்டதுதான் யாழ்ப்பாணம். மிகவும் அழகிய தோற்றம் கொண்ட யாழ் நகரிலே, யாழ் கோட்டை, யாழ் நூலகம், பிரசித்தி பெற்ற நல்லூர் ஆலயம் என்பவற்றுடன் பல சிறப்புக்களை தன்னகத்தே உள்ளக்கியதாக யாழ் நகரம் அமைந்துள்ளது.போரினால் பலமாக யாழ்ப்பாணம் பாதிக்கப்பட்டிருந்தாலும் சுற்றுலா பயணிகளை ஈர்ர்க்கும் விதமாக அமைந்துள்ளது யாழ்ப்பாண பட்டினம்.

இச்செயற்றிட்டத்தின் மூலம் யாழ் மாவட்டத்தினதும், அங்கு வாழும் மக்களினதும் வரலாற்றினையும் அதன் முக்கியத்துவத்தையும் ஆவணப்படுத்தல் .

## இலக்குகளும் நோக்கங்களும்

- இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களின் வரலாற்றின் உருவாக்கத்திலே யாழ்ப்பாண மாவட்டமும், அங்கு வாழும் மக்களும் கொண்டிருக்கும் வகிபங்கினை வெளிக்கொண்டு வருதல்.

- யாழ்ப்பாண மாவட்டத்தினதும் அங்கு வாழும் மக்களினதும் வரலாற்றினை ஆவணப்படுத்தும் இந்த முயற்சியானது, அதனுடைய கால மற்றும் இட ரீதியிலான தன்மைகளின் அடிப்படையில் பரந்துபட்டது. இந்த முயற்சியினை ஒரு செயற்றிட்டத்தின் மூலமாக நிறைவுசெய்ய முடியாது. இந்த முதலாவது செயற்றிட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தினைச் சேர்ந்த கிராமங்களையும், அங்கு வாழ்ந்த மற்றும் தற்போது வாழுகின்ற மக்களினை ஆவணப்படுத்துவதனை பிரதான நோக்காகக் கொண்டுள்ளது.

- யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய தனித்துவமான சமூகக் கட்டமைப்புக்கள், பண்பாட்டு அம்சங்கள், கலை வடிவங்கள், சடங்குகள், மரபுகள், இலக்கியங்களை வெளிக்கொண்டு வருதல்.

- யாழ்ப்பாண மாவட்டத்தினுள் அவதானிக்கப்படும் பன்மைத்துவம், அசமத்துவங்கள், அதிகார மையங்கள், மக்களின் எதிர்ப்பு முயற்சிகள் பற்றி ஆவணங்கள் வாயிலாக வெளிப்படுத்தல். அத்துடன் மன்னார் பற்றிய ஆய்வுகளிலே ஈடுபடுவோருக்கு ஊக்குவிப்பினை வழங்குதலும், அவர்கள் தமக்கு வேண்டிய பிரதான ஆதாரங்களை இலகுவில் பெறக்கூடிய ஒரு அமைப்பினை இணையவெளியில் உருவாக்குதல்.

## எதிர்பாக்கப்படும் செலவீனம்

**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132